Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Vellore District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | Sigamani |
| Father's Name | Krishnan |
| Village | Kavalur |
| Taluk | Vaniyambadi |
| Caste | - |
| Calling | - |
| Religion | Hindu |
| Age | 63 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.11.2022

MCOP.121/2020 PW2 Name:சிகாமணி

**முதல் விசாரணை**

நான் 2 ஆம் மனுதாரர். என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1 ஆம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை

விபத்தில் காயம் அடைந்த மகாலட்சுமி என்னுடைய பேத்தி. விபத்து சமயத்தில் அவருக்கு 5 வயது இருக்கும். விபத்து காவலூர் கிராமத்தில் கண்ணன் வீட்டருக்கே நடந்தது. 18.09.2020 ல் மதியம் 2 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து நடந்த உடன் சத்திரம் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். மேல் சிகிச்சைக்காக வாணியம்பாடி டேவிட் மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 10 நாட்கள் சிகிச்சை பெற்றார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் டிஎன் 83 8532 ஆகும். 1 ஆம் எதிர்மனுதாரர் இருச்ககர வாகனத்தை ஆரான் அடித்து மெதுவாகதான் ஒட்டி வந்தார் என்றாலும் குழந்தைதான் ஆஜாகிரதையாக வந்து வண்டியின் மேல்

விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதரார் அவரது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 2 ஆம் எதிர்மனுதாரிடம் காப்பிடு செய்துள்ளார். இவ்வழக்கில் இழப்பிடு வழங்கவேண்டும் என்றால் 2ஆம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் அவரது வாகனத்திற்கு சரியான ஒட்டுநர் உாிமம் வைத்துள்ளார் என்றால் சரி. 1ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/11/2022 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/ கைரேகை செய்யப்பட்டது.

Sd//செல்வி.எஸ்.அசீன் பானு.,பி.எல்.
சாா்பு நீதிபதி
வாணியம்பாடி.